සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

නිවාස හා සමාජ සුබසාධන අමාත්‍යාංශය
வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சு
**MINISTRY OF HOUSING AND SOCIAL WELFARE**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>**எனது இல** DSD/HO/MF/5/I/சுற்றுநிருபம்<br>**My No** | ඔබේ අංකය<br>**உமது இல** ........................................<br>**Your No** | දිනය<br>**திகதி** 2018.11.28<br>**Date** |

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சுற்றுநிருப இலக்கம் :- 2018/14**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் ஆண்டு இறுதி கணக்கு முடித்தல் மற்றும் நிதிக் கூற்று தயாரித்தல் - 2018</u>**

**1. அறிமுகம்:-**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் குறுநிதி வங்கிப் பிரிவின் கீழ் செயற்படும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் ஆண்டு இறுதிக் கணக்கு முடித்தல் மற்றும் 2018ம் ஆண்டுக்கான நிதிக்கூற்று அறிக்கை தயாரித்தல் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் இத்தால் வழங்கப்படுகின்றது. ஏற்கனவே இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள நெறிப்படுத்தல் ஆலோசனைக் கையேட்டு இலக்கம் 12லும் அதன் இணைப்புக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஆண்டு இறுதிக் கணக்கு முடித்தல் மற்றும் நிதிக்கூற்று அறிக்கை தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்கு மேலதிகமாக இத்தால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டியது வங்கிகள் / வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்கள் மற்றும் பணிக்குழுவினரின் கடமையாகும். இன் நடவடிக்கைகளை 2018.12.31 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் முடிவுறுத்த வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

**2. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் அங்கத்தவர்களுக்கு பங்கு இலாபம் அல்லது பங்கு வட்டி வழங்குதல்.**

2.1 2018/13 இலக்க சுற்றுநிருப ஆலோசனையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டுக்கு பங்காளர்களுக்கு பங்கிலாபம் அல்லது பங்கு வட்டி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**3. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பணிக்குழுவினருக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்ட சம்பளம், பிரயாணக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட ஏனைய செலவீனங்களைச் சீர்செய்தல்.**

**3.1** நெறிப்படுத்தல் ஆலோசனை 12இன் ஐந்தாவது பிற்சேர்க்கையில் குறிப்பிட்டதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டினுள் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் / வங்கிச்சங்கங்களின் நிரந்தர பணிக்குழுவின் பொருட்டு வழங்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவின் உண்மையான தொகையினை உரிய ஆலோசனைகளின் பிரகாரம் மதிப்பீடு செய்து செலவுகள் பதியப்படுதல் வேண்டும்.

3.2 பணிக்குழுவினரின் சம்பளம் கணிப்பீட்டின் போது கீழ் வரும் விடயங்களில் தங்களது அவதானத்தை செலுத்தல் வேண்டும்.

3.2.1 வருடம் முழுவதும் யாராயினும் ஒரு உத்தியோகத்தர் வங்கி / வங்கிச் சங்க பணிகளில் இணைத்துக் கொள்ளப்படாதிருப்பின், அவர் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச்சங்கத்தில் கடமையினை மேற்கொண்ட காலத்திற்கு மாத்திரம் வழங்கப்பட்ட சம்பளத்தொகையினையே சம்பளச் செலவுக்குள் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.
(சேவைக்காலம் குறைந்தது 01 மாதம் அல்லது அதனை விட அதிகரிக்கலாம்)

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>**பணிப்பாளர் தலைமையதிபதி**<br>Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන)<br>**பணிப்பாளர்** ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>**பிரதான கணக்காளர்**<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>**அலுவலகம்**<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 288772** |
| | | **Hot Line :0112-889007** | | | |

3.2.2 சம்பளத்துடனான விடுமுறை அனுமதிக்கப் பெற்று விடுமுறையில் நிற்கின்ற உத்தியோகத்தர்களின் சம்பளமும் சம்பளக் கணிப்பீட்டின் போது சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

3.2.3 பதிற்கடமை உத்தியோகத்தர் ஒருவர் வங்கி அல்லது வங்கிச்சங்கத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருப்பின் அவ் உத்தியோகத்தர்களின் சம்பளம் பணிக்குழு சம்பளக் கணிப்பீட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை. (ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் பதில் கடமைக்கான சம்பளம் அனுமதிக்கப்பட்டிருப்பின் அதற்காக வழங்கப்பட்ட சம்பளம் பணிக்குழு சம்பளக்கணிப்பீட்டின் போது சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.)

3.3. பணிக்குழுவினரின் சம்பளம் கணிப்பீடு செய்யப்படும் போது EPF மற்றும் ETF நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் உத்தியோகத்தர்களின் மாதாந்த திரட்டிய சம்பளத்தில் அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்படும் 12% EPF மற்றும் 3% ETF தொகையினைச் சேர்த்து ஒவ்வொரு மாதத்திற்குமான சம்பளத்தொகை கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் எந்தவொரு வங்கிக்கோ அல்லது வங்கிச் சங்கத்திற்கோ பணிக்குழுவினரின் சம்பளச் செலவீனங்களை உள்ளடக்காது வருடாந்த இலாப நட்டக்கணக்கினை தயாரிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

3.4 விதவைகள் அனாதைகள் மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் உத்தியோகத்தர்களின் மாதாந்த திரட்டிய சம்பளமே சம்பளக் கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

## 4. கட்டாய சேமிப்பு மற்றும் சமுர்த்தி நலனுதவிக் கொடுப்பனவு நிதியங்களை கணக்கு வைத்தல்.

4.1 சமுர்த்தி நலனுதவித் தொகையில் கட்டாய சேமிப்புக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய நிதிய கணக்கில் மீதிகள் காணப்படும் வங்கிகள் மிக விரைவாக இம்மீதியினை உரிய பயனுகரிகளின் கணக்குகளில் வரவு வைத்தல் வேண்டும். தொடர்ச்சியாக இக்கணக்கில் மீதியினை செயற்படுத்திக் கொண்டு செல்வது 2018ம் ஆண்டுக்கு தயாரிக்கப்படும் நிதிக்கூற்று அறிக்கையின் உண்மைத்தன்மையைப் பாதிப்பதாக அமையும்.

4.2. சமுர்த்தி நலனுதவி நிதியத்தில் வாடிக்கையாளரின் வைப்புக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய நிதியம் இருப்பின் அதனை வரவு வைப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றினை தயாரித்து துரிதமாக வரவு வைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அதே போல் 2018 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்திற்குரிய நலனுதவித் தொகை வங்கிக்கு கிடைத்தவுடன் அதனை கணக்குகளுக்கு வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

## 5. கட்டாய சேமிப்பு முதலீட்டு நிதியத்துக்கு வட்டி வழங்கல்

5.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளால் பிரதான காரியாலயத்தின் குறுநிதி வங்கிப் பிரிவுக்கு முதலீட்டுக்காக அனுப்பி வைத்த கட்டாய சேமிப்பு முதலீட்டு நிதியத்திற்கு உரிய வட்டித் தொகையினை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

5.2 2018ம் ஆண்டிற்குரிய தனிநபர்களின் கட்டாய சேமிப்பு வைப்புகளுக்கான வட்டி வருடாந்தம் 6% ஆக கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு வரவு வைக்க/ ஒதுக்கி வைக்கவேண்டும். ஏனைய வைப்புக்களுக்கு தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதத்தில் மாற்றம் எதுவும் இல்லாது செயற்படுத்தல் வேண்டும்.

## 6. சிங்கள/தமிழ் புத்தாண்டு விழாவின் பொருட்டு குறுநிதி பிரிவின் ஊடாக நிதி மீளளிப்புச் செய்தல். 2018

6.1. நெறிப்படுத்தல் ஆலோசனைகளுக்கு அமைய 2018ஆம் ஆண்டுக்குரிய சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவினால் மீளளிப்புச் செய்யவேண்டிய நிதியங்கள் இதுவரை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளுக்கு குறுநிதி வங்கிப் பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

6.2. மீளளிப்பு நிதிக்கான கோரிக்கைகள் நெறிப்படுத்தல் ஆலோசனை சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்த திகதிக்கு பின்னர் தாமதமாகி அனுப்பி வைக்கப்பட்டிருந்தமையினால் அவற்றிற்கு நிதி வழங்குவதில்லை என கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனவே இன்னும் வங்கியில் பெற்றுக் கொள்ளவேண்டிய நிதியாக இது காணப்படின் கீழ்வரும் கணக்குப் பதிவுகளினூடாக செலவுக்கணக்கிற்கு மாற்றம் செய்யவும்

பற்று - செலவுக் கணக்கு – விழாச் செயற்பாடுகள்.
வரவு - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து மீளளிப்புச் செய்ய வேண்டிய நிதியக்கணக்கு.

## 7. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ளல். (2018.12.31 ஆம் திகதியில்)

7.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் முகாமையாளர்கள் தனது வங்கிச் சங்கத்தின் பெயரில் அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதியங்களில் 2018.12.31இல் முதிர்வடையாமல் உள்ள முதலீடுகளின் மீதியினை உறுதிப்படுத்தி 2019 ஜனவரி 15ம் திகதிக்கு முன்னர் அதற்கான சான்றிதழைப் பெற்று முதலீடுகளின் உண்மைத் தன்மையினை உறுதி செய்து கொள்ளவும், அந்த மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழை பாதுகாப்பான விதத்தில் கோவை செய்து கொள்ளவும்.

7.2 சமுதாய அடிப்படை வங்கிகள் எழுத்து மூலமாக வங்கிச் சங்கத்தில் செய்துள்ள முதலீடுகள் தொடர்பான உறுதிப்படுத்தலை 2019.01.25 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று நிதியங்களின் முதலீடு தொடர்பான உண்மைத் தன்மை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதே போல் அம் மீதிகளை உறுதிப்படுத்திய சான்றிதழ்களை பாதுகாப்பாக கோவை செய்து வைத்தல் வேண்டும். உரிய வங்கிகட்கு முதலீட்டு உறுதிப்படுத்தல் கடிதங்களை விரைவாக வழங்க வேண்டியது வங்கிச் சங்கங்களின் பொறுப்பாகும்.

7.3 மேற்படி 7.1 மற்றும் 7.2 பந்திகளில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றி பெற்றுக்கொண்ட முதலீட்டு மீதி உறுதிப்படுத்தல்களை உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் / வெளியக கணக்காய்வு உத்தியோகத்தர்களின் கணக்காய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பாதுகாப்பான முறையில் வைத்திருத்தல் வேண்டும்.

## 8. முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று தயாரித்தல்.

8.1 2018ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் கூற்றுக்களை சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளும் மற்றும் வங்கிச் சங்கங்களும் தயாரித்துக் கொள்ள வேண்டும்
(அதற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களுக்கமைய)

- 8.1.1 2018.12.31 திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று
- 8.1.2 2018.12.31 திகதியில் உள்ளவாறான ஐந்தொகை (நிதி நிலைக்கூற்று)
- 8.1.3 2018.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று
- 8.1.4 உரிமை மாற்றல் கூற்று
- 8.1.5 கணக்கீட்டுக் கொள்கைக் கூற்று.

8.2 பந்தி 8.1.1 மற்றும் 8.1.2களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு பயன்படுத்திய குறிப்புக்களை விளக்கமான முறையில் முன்வைத்தல் வேண்டும்.

8.3 2018.12.31 இல் முடிவடையும் வருடத்திற்காக தயாரிக்கப்படும் நிதிக்கூற்றினை வங்கி / வங்கிச்சங்கங்களின் கட்டுப்பாட்டுச்சபை / நிறைவேற்றுச் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

8.4 2018ஆம் ஆண்டுக்கான வெளியக கணக்காய்வினை மேற்கொள்வதற்குரிய கோரிக்கை நிதிக்கூற்று அறிக்கையுடன் 2019.02.28ஆம் திகதிக்கு முன்னர் குறுநிதி பிரிவின் பணிப்பாளருக்குஅனுப்பி வைத்தல் வேண்டும். அதன் பிரதியினை மாவட்ட சமுர்த்தி பிரிவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

8.5 கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கும் நிதிக்கூற்று அறிக்கையினை தயாரிக்கும் போது அதனை மிகவும் நேர்த்தியான விதத்தில் தயாரிக்குமாறும் சமுர்த்தி வங்கி / வங்கிச்சங்க கட்டிடத்தின் புகைப்படத்தினை முன் அட்டையில் உள்ளடக்குவது மிகவும் பொருத்தமானதாக அமையும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்

## 9. மாதாந்தம் வங்கியின் முன்னேற்ற அறிக்கைகள் அனுப்புதல்.

9.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் 2018 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கு முடித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் கணக்கு முடிப்பதற்கு முன்னரும் கணக்கு முடித்த பின்னருமான பரீட்சை மீதிகளை தயாரித்துக் கொள்ளவும். வழமை போல் முன்னேற்ற அறிக்கை, பரீட்சை மீதி (முன்னர்/பின்னர்) என்பவற்றை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய தயாரித்து 2019.01.05 ஆம் திகதிக்கு முன்னர் இறுவெட்டு (CD) அல்லது மின்னஞ்சல் (e-mail) மூலம் சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வங்கிச் சங்கம் 2019.01.10 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட சமுர்த்திப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

9.2 மாவட்ட சமுர்த்தி பிரிவு சகல வங்கிகள் / வங்கிச் சங்கங்களினதும் மாதாந்த தகவல்களை 2019.01.20 ஆம் திகதிக்கு முன்னர் குறுநிதி வங்கிப்பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**10. 2018 ஆம் வருடத்துக்கான ஆண்டிறுதிக் கணக்கு முடித்தல் மற்றும் நிதிக் கூற்று தயாரித்தலின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் / வங்கிச் சங்கங்களில் வார இறுதி நாட்களில் கடமையினை மேற்கொள்ளுதல் மற்றும் நாட்சம்பளம் வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்குதல்.**

10.1 2018 ஆம் ஆண்டுக்கான கணக்க முடித்தல் நடவடிக்கைகள் மற்றும் நிதிக்கூற்று அறிக்கை தயாரித்தல் போன்றவற்றை துரிதப்படுத்தும் பொருட்டு முன் / பின் தயார்ப்படுத்தலுக்காக 2018 டிசம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளினதும் 2019 ஜனவரி மாதத்தின் முதல்வாரத்தின் 02 வார இறுதி நாட்களும் உட்பட 04 வார இறுதி நாட்களின் விடுமுறை தினங்களில் கடமையினை மேற்கொள்ள இடமளிக்கப்படுகின்றது. (ஏற்கனவே நெறிப்படுத்தல் ஆலோசனைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள வார இறுதி கடமை வேலை நாட்களுக்கு மேலதிகமாகவே இது வழங்கப்படுகின்றது.)

10.2 மேற்படி 10.1 பிரகாரம் செயற்படும் போது வங்கியினை திறந்து வங்கிப் பணிக்குழுவினர் கடமையில் ஈடுபடும் நாட்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு இடமளிக்கப்படுகின்றது. மேலும் சமுர்த்தி வங்கிச் சங்க பணிக்குழுவினருக்கு 2018 டிசம்பர் 30 மற்றும் 2019 ஜனவரி 05 ஆகிய இரு தினங்களில் மாத்திரம் கடமையினை மேற்கொள்வதற்கும் அதற்கான சம்பளத்தினை வங்கிச் சங்க நிதியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

**11. தைப் பொங்கல் தின நிகழ்வு.**

இந்து மக்களால் பக்தியுடன் கொண்டாடப்படும் தைப் பொங்கல் விழா 2019 ஜனவரி 14 ஆம் திகதியாகும். இவ் விழாவினை இந்து சமய சம்பிரதாய முறைப்படி கொண்டாடுவதுடன் அதனோடு இணைந்ததாக சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினையும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனையும் வழங்கவும்.

**12. 2019 புதுவருடத்துக்கான சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.**

12.1 2019 புதுவருடத்தின் முதலாவது கடமை நாள் 2019 ஜனவரி 01 ஆம் திகதியாதலால் அத்தினத்தில் கொடுக்கல் வாங்கலின் பொருட்டு வாடிக்கையாளர்களை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக்கு வருமாறு அன்பான அழைப்பை விடுக்கவும்.

12.2 அத்தினம் சிங்கள சம்பிரதாயங்களின் பிரகாரம் தேசிய இனிப்புப் பண்டங்கள் சிலவற்றுடன் தேனீர் உபசாரம் ஒன்றினை வங்கியின் செலவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவும். இவ் உபசாரம் வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்கள், கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் பிரிவில் கடமையாற்றும் கள உத்தியோகத்தர்கள் போன்றோருக்கு அன்பாக பரிமாறுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். இதற்காக கூடியது ரூபா. 5,000/= க்குள் செலவினத்தினை மேற்கொள்வதுடன், இதனை செலவுக் கணக்கு உபசாரச் செலவில் கணக்கு வைப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

**13. 2019 புது வருட வாழ்த்துக்களில் இணைந்து கொள்ளல்.**

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதி வங்கிப் பிரிவின் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு, சமுர்த்தி பயனுகரிகள் அடங்கலான குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தி அவர்கட்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு 2018 ஆம் ஆண்டில் அர்ப்பணிப்பணிப்புடன் செயற்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்கள், மாவட்ட செயலாளர்கள், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் , பிரதேச செயலாளர்கள் , தலைமையக முகாமையாளர்கள் உட்பட அனைத்து பணிக்குழுவினருக்கும், சமுதாய அடிப்படை கட்டமைப்பின் சமுதாயத் தலைவாகள் உட்பட எங்களுடன் கைகோர்த்துச் செயற்பட்டு ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் பாராட்டுவதுடன்,

**“மலரவிருக்கும் 2019 ஆம் ஆண்டு சகலருக்கும் மங்களகரமான ஆண்டாக மலர எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்”.**

நிமல் கொட்டவல கெதர
பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்** :-

1. செயலாளர், வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சு - தகவலுக்காக
2. சகல மாவட்ட செயலாளர்கள்/ சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
3. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காக
4. சகல பிரதேச செயலாளர்களுக்கும், - தகவலுக்காக
5. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காக